மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்கள்தான் கிராம அளவில் மக்களின் நலனைப் பேணுவதில் முதன்மையான பொறுப்பில் இருப்பவர்கள். குழந்தைகளின் உரிமைகளை மீட்டுத் தருவது தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கடமையாகும். கிராம அளவில் குழந்தைகளுக்கான பாதுகாப்புக் குழுவை அமைத்து வழி நடத்துவதில் ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு பெரும் பங்கு இருக்கிறது. அதேபோல் அரசின் சட்டங்களையும் திட்டங்களையும் நன்கு தெரிந்து கொண்டால்தான் அவற்றை பயன்படுத்தி தன் பகுதியில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் ஊராட்சி மன்ற உறுப்பினர்களால் நன்கு பணியாற்ற முடியும் . இதுகுறித்த அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கி உருவாக்கப்பட்டதுதான் இந்தக் கையேடு.

இளந்தென்றல்

குழந்தைத் திருமணத்தை
முடிவுக்குக் கொண்டு வருவோம்!




# பாதுகாப்பான குழந்தைப்பருவத் திட்டம் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கான கையேடு

# பாதுகாப்பான குழந்தைப்பருவத் திட்டம்

# பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கான கையேடு

இளந்தென்றல்

வளரிளம் பருவத்தினரின்
தன்னுரிமை மேம்பாடு மற்றும் குழந்தைத் திருமணத்தை
முடிவுக்குக் கொண்டு வரும் திட்டத்துக்கான கருத்துப் பெட்டகம்

பாதுகாப்பான குழந்தைப்பருவத் திட்டம்:
பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கான கையேடு

A Safe Childhood Programme
A handbook for Panchayat members

முதல் பதிப்பு: மார்ச், 2020

First Edition: March, 2020

மாநில கருவூல மைய வெளியீடு, சென்னை 600 020.
State Resource Centre, Chennai - 600 020.

வடிவமைப்பு:
THY Designers & Computers
Triplicane, Chennai - 600 005

044-42113807

நன்றி:

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காக யுனிசெஃப் (UNICEF) அமைப்பும் குழந்தை உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய ஆணையம் (National Commission for Protection of Child Rights) ஆகிய அமைப்புகள் இணைந்து ஆங்கிலத்தில் உருவாக்கிய கையேட்டின் தமிழ் வடிவம்.

தமிழ் வடிவம்: மாநில கருவூல மையம்

தொடர்புக்கு: sbtamilnadusrc@gmail.com

# அறிமுகம்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்கள்தான் கிராம அளவில் மக்களின் நலனைப் பேணுவதில் முதன்மையான பொறுப்பில் இருப்பவர்கள். கிராமத்தின் முன்னேற்றத்திற்கும் ஒட்டு மொத்த மக்களின் வளர்ச்சிக்கும் பாடுபடும் இவர்கள்தான் குழந்தைகளின் பாதுகாப்பிற்கும் நலனுக்கும் உத்தரவாதம் தர வேண்டியவர்கள். நம் சமூகத்தில் குழந்தைகள் எந்த வித பலமும் இல்லாதவர்களாக எளிதில் பிரச்சினைகளில் ஆட்படுபவர்களாக இருக்கிறார்கள். அதாவது, குழந்தைத் தொழிலாளர்களாக பணியாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறார்கள். கடத்தப்படுகிறார்கள். எச்.ஐ.வி /எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சமூகத்தால் நிராகரிக்கப்படுகிறார்கள். பரம்பரைப் பழக்கவழக்கம் என்ற பெயரால் சிறுமிகள் குழந்தைத் திருமணத்திற்கு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். குழந்தைகளின் உரிமைகளை மீட்டுத் தருவது தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கடமையாகும். கிராம அளவில் குழந்தைகளுக்கான பாதுகாப்புக் குழுவை அமைத்து வழி நடத்துவதில் ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு பெரும் பங்கு இருக்கிறது. அதேபோல் அரசின் சட்டங்களையும் திட்டங்களையும் நன்கு தெரிந்து கொண்டால்தான் அவற்றை பயன்படுத்தி தன் பகுதியில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் ஊராட்சி மன்ற உறுப்பினர்களால் நன்கு பணியாற்ற முடியும் . இதுகுறித்த அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கி உருவாக்கப்பட்டதுதான் இந்தக் கையேடு.

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காக யுனிசெஃப், குழந்தை உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய ஆணையம் (National Commission for Protection of Child Rights) ஆகிய அமைப்புகள் ஆங்கிலத்தில் உருவாக்கிய இந்தக் கையேட்டுக்கு மாநில கருவூல மையம் தமிழ் வடிவம் கொடுத்துள்ளது. இந்த முயற்சிக்குத் துணை நிற்கும் தமிழக அரசின் சமூக நலத் துறை, யுனிசெஃப் அமைப்பு ஆகியவை தரும் ஒத்துழைப்பையும் நன்றியுடன் நினைவு கொள்கிறோம்.

நமது நோக்கம் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வருதல். அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயல்பட்டால்தான் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும். இந்த முயற்சியில் அனைவரும் ஒன்றிணைவோம்!

## குழந்தைகள் என்பவர் யார் ?
## அவர்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் என்ன ?

ஒரு குழந்தை என்பவர் யார் என்ற வரையறை வெவ்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் மாறுபடுகிறது. ஆனால், சர்வதேச மற்றும் இந்திய சட்டத்தின் படி ஒரு குழந்தை என்பவர் 18 வயதுக்குட்பட்ட கவனிப்பும் பாதுகாப்பும் தேவைப்படுகின்ற, அரசிடம் இருந்து அதை பெறுவதற்கான உரிமை பெற்ற நபர். அதாவது உலகத்தில் வாழும் 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு நபரும் குழந்தையாக கருதப்பட்டு அவர்களுக்குத் தேவையான ஆதரவும் பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும்.

குழந்தைகளுக்கு பாதுகாப்பு ஏன் தேவைப்படுகிறது? ஏன் அவர்களுக்கு தனி கவனம் தேவைப்படுகிறது? இதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.

- குழந்தைகள் தான் நம் நாட்டின் எதிர்காலம். அவர்களுடைய உடல் நலத்தை பாதுகாத்தால், ஆரோக்கியமான குடிமக்களாக அவர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பார்கள்.
- பெரியவர்களுடன் ஒப்பிடும்போது குழந்தைகள் அவர்கள் வாழ்விடத்தில் உள்ள சூழலுக்கு எளிதில் வயப்படுபவர்கள்.
- அரசு மற்றும் சமூகத்தின் செயல்பாடுகள் செயலற்ற தன்மையினால் வேறெந்த வயதினரையும் விட அதிகம் பாதிக்கப்படுபவர்கள் குழந்தைகளே.
- நம் சமூகத்தில் குழந்தைகள் பெற்றோரின் சொத்தாகவும் உரிமைகள் ஏதும் இல்லாதவர்களாகவும் சமூகத்திற்கு எந்த வித பங்களிப்பையும் அளிக்காதவர்களாகவும் கருதப்படுகிறார்கள்.
- குழந்தைகளுக்கு ஓட்டுபோடும் உரிமையில்லை. பெரும்பாலான நேரங்களில் மற்றவர்களிடம் தங்கள் கருத்துக்களைக் கூட அவர்கள் வெளிப்படுத்த முடிவதில்லை.
- குறிப்பாக குழந்தைகளே அதிகப்படியான சுரண்டல் மற்றும் வன்முறைக்கு ஆளாகிறார்கள்.

**மேற்கூறிய காரணங்களுக்காக ஒரு குழந்தையை ஆதரித்து பாதுகாத்தல் அவசியமாகிறது. இதனை நடைமுறைப்படுத்துவதில் பஞ்சாயத்து உறுப்பினர்கள் முக்கிய பங்காற்றலாம்.**

# குழந்தைகளின் உரிமைகள்

இந்திய அரசியலமைப்புச் சட்டமானது அனைத்து குழந்தைகளுக்கும் சில உரிமைகளை உறுதிப்படுத்தியிருக்கிறது. அவர்களுக்காகவே தனி கவனத்துடன் சேர்க்கப்பட்ட அவ்வுரிமைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- ***6-14 வயதிலுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய தொடக்கக் கல்வி*** – *இந்திய அரசியலமைப்புச் சட்டமானது, 6-14 வயதிலுள்ள அனைத்து குழந்தைகளுக்குமான இலவச தொடக்கக் கல்வியை உறுதிப்படுத்தியுள்ளது.*
- ***14 வயது வரை ஆபத்தான எவ்வித வேலை வாய்ப்பிலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டிய உரிமை*** – *14 வயதிற்கு கீழுள்ள குழந்தைகள் ஆபத்தான எவ்வித பணியிலும் அமர்த்தப்படமாட்டார்கள்.*
- ***பொருளாதார நிர்ப்பந்தத்தால் தங்கள் வயது அல்லது உடல் பலத்திற்குப் பொருந்தாத பணிகளில் ஈடுபடுத்துதல் மற்றும் மோசமாக பயன்படுத்துவதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டிய உரிமை***–*தங்கள் வயது மற்றும் உடல் தகுதிக்கு மீறிய வேலைகளில் குழந்தைகள் பணி அமர்த்தப்படமாட்டார்கள்.*
- ***ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தேவையான சமவாய்ப்பு மற்றும் வசதிகளுக்கான உரிமை*** – *ஆரோக்கியமான வளர்ச்சிக்குரிய சம வாய்ப்புகள் அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்படும்.*
- ***சமமாக நடத்தப்படுவதற்கான உரிமை*** – *பெரியவர்களைப் போலவே, குழந்தைகளுக்கும் சாதி, பாலினம் மற்றும் சமூகப் பின்னணியை கருத்தில் கொள்ளாமல் சமமாக நடத்தப்படுவதற்கான உரிமையுண்டு.*
- ***பாரபட்சத்திற்கு எதிரான உரிமை*** – *சாதி, பாலினம், மதம் மற்றும் வேறெந்த அடிப்படையிலும் குழந்தைகளிடம் பாரபட்சம் காட்டக் கூடாது.*
- ***கடத்தப்படுதல் மற்றும் கொத்தடிமைத்தனத்திற்கு கட்டாயப்படுத்துவதிலிருந்து காக்கப்படும் உரிமை*** – *ஒவ்வொரு குழந்தைக்கும் கடத்தல் மற்றும் கொத்தடிமைத்தனத்திற்கு தள்ளப்படுவதில் இருந்து பாதுகாக்கப்படுவதற்கான உரிமையுள்ளது.*
- ***உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்திற்கான உரிமை***-*எந்த பாலினம், சாதி மற்றும் உட்பிரிவைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஒவ்வொரு குழந்தைக்கும் நலவாழ்வு வசதிகளைப் பயன்படுத்தி ஆரோக்கியமான குடிமக்களாக வளர உரிமையுள்ளது. குழந்தைகளுக்கு நலவாழ்வு வசதிகளை அளித்து சத்துணவு குறைபாடுகளிலிருந்து காப்பாற்றுதல் முக்கியமானதாகும், அது அவர்களின் உரிமை.*

இந்த அரசியலமைப்பு உரிமைகளைத் தவிர, குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் உரிமைகளுக்கென பிரத்யேகமான சட்டங்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன. பொறுப்பான பஞ்சாயத்து உறுப்பினர்கள் என்ற வகையில், இவைகளைப் பற்றியும் அவற்றின் முக்கியத்துவத்தையும் நீங்கள் தெரிந்திருப்பது முக்கியமாகிறது. இதன்மூலம், உங்கள் கிராமத்திலுள்ள குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் உங்கள் பங்கை அளிக்க முடியும்.

# குழந்தை பாதுகாப்பு – மாயைகள் மற்றும் உண்மைகள்

குழந்தைகளின் உரிமைகளைப் பற்றி பல தவறான நம்பிக்கைகள் உள்ளன. குழந்தைகளுக்கு ஏன் பாதுகாப்பு தேவை மற்றும் அது யாரிடமிருந்து தேவைப்படுகிறது என்பது பலருக்கும் புரிவதில்லை. ஆனால் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு இது பற்றிய விழிப்புணர்வு மிகவும் அவசியமாகிறது. அப்போதுதான் தங்கள் கிராமத்தில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்புக்கு அவர்களின் பங்களிப்பை அளிக்க முடியும். குழந்தை பாதுகாப்பு தொடர்பான தவறான கருத்துக்களைப் பார்க்கலாம்.

| மாயை | அனைத்து குழந்தைகளையும் சமூகம் நேசிப்பதால் அவர்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதில்லை |
|---|---|
| **உண்மை நிலை** | நாம் நம் குழந்தைகளை நேசித்தாலும், இந்தியாவில் தான் அதிகபட்சமான குழந்தை தொழிலாளர்கள் உள்ளனர். குழந்தைகள் மீதான பாலியல் கொடுமைகளும் அதிகபட்சமாக பதிவு செய்யப்படுகின்றன என்பதுதான் உண்மை. ஆண் குழந்தைகளோடு ஒப்பிடுகையில், பெண் குழந்தைகளின் நிலை மிகவும் மோசம். 0-6 வயதிலுள்ள பெண் குழந்தைகளின் எண்ணிக்கை அதே வயதில் உள்ள ஆண் குழந்தைகளின் எண்ணிக்கையை விட மிகவும் குறைவு. பெண் சிசுக்கொலை நிகழ்வுகள் இங்கு அதிகம். புள்ளி விவரங்களின்படி, 2002 மற்றும் 2003-க்கு இடையே குழந்தைகளுக்கெதிரான குற்றங்கள் 11.1 சதவீகிதம் அதிகரித்துள்ளது. இத்தகைய சூழலில்தான் குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்துதல் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதும் குழந்தைகள் உரிமைக்கான சட்டங்கள் சரியாக அமல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதும் அவசியமாகின்றன. |
| மாயை | வீடுதான் குழந்தைகளுக்கு மிகவும் பாதுகாப்பான இடம் |
| **உண்மை நிலை** | இது உண்மை அல்ல. நெருங்கிய உறவினர்களே குழந்தைகளை பாலியல் ரீதியாக தவறாக கையாள்வது பற்றிய செய்திகளை நீங்கள் அடிக்கடி செய்தித்தாள்களில் படித்திருக்கக்கூடும். பல பெற்றோர் தங்கள் குழந்தைகளைப் பணத்திற்காக விற்கின்றனர். பெண் சிசுக்கொலை மற்றும் பெண் குழந்தைகள் கருவிலேயே அழிக்கப்படுவதைப் பற்றிய நிகழ்வுகளை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். குழந்தைகளை அடித்தல் என்பது பல குடும்பங்களில் வழக்கமான ஒன்றாக இருக்கிறது. கடமையை முடித்தால் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் பல குடும்பங்கள், குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே திருமணம் செய்துவிடுகிறார்கள். இம்மாதிரியான விஷயங்களில் அரசு, சமூகம் மற்றும் பஞ்சாயத்து உறுப்பினர்கள்தான் இந்தக் குடும்பங்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தேவை ஏற்படின் இதுபோன்ற குற்றங்களைச் செய்யும் குற்றவாளிகளைச் சிறையில் தள்ள வேண்டும். |

| மாயை | ஆண் குழந்தைகளைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அவர்களே தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் திறமையுடையவர்கள். |
|---|---|

| இது உண்மையல்ல. பெண் குழந்தைகளைப் போலவே ஆண் குழந்தைகளும் பாலியல் மற்றும் உணர்வு ரீதியான பிரச்சினைகளுக்கு ஆளாகிறார்கள். சில சமயங்களில் ஆண் குழந்தைகள், குழந்தைத் தொழிலாளர்களாகவும், கொத்தடிமைகளாகவும் பணியாற்ற கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். வேலை செய்யும் இடங்களிலும் அவர்கள் அடிக்கடி பாலியல் தாக்குதலுக்கு ஆளாகிறார்கள். இத்தகைய சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்கு அரசு உதவி பெறும் சட்ட நிறுவனங்களிடமிருந்து உதவி பெற்றுக் கொள்ள வேண்டும். | உண்மை நிலை |
|---|---|

| மாயை | குழந்தைகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதால் அவர்களைப் பாதுகாத்தல் அவசியமில்லை. அவர்கள் பெற்றோர்களின் சொத்து. |
|---|---|

| குழந்தைகள் சிறியவர்களாக இருப்பதால் பெரியவர்களைப் போன்று அவர்களுக்கு உரிமைகள் ஏதுமில்லை, குழந்தைகள் அவர்களின் பெற்றோருக்குச் சொந்தமானவர்கள் என்பதால் அவர்களுக்கு எது நல்லது எது கெட்டது என்பது பெற்றோருக்குத் தெரியும் போன்ற பல கருத்துக்கள் நிலவுகின்றன. உண்மை என்னவெனில், கிராமங்களிலுள்ள பெரியவர்களுக்கு குழந்தைகளின் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு மிகவும் குறைவாகவே உள்ளது. குழந்தைகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கட்டுப்பாட்டு விதிகள் மற்றும் சர்வதேச சட்டங்களும் உள்ளன என்பது பற்றிய விழிப்புணர்வு அவர்களுக்கு இல்லை. குடும்பங்கள் மற்றும் கிராம மக்களிடம் இவைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பஞ்சாயத்து உறுப்பினர்களின் பங்கு இருக்கிறது. | உண்மை நிலை |
|---|---|

| மாயை | சிறு வயதிலேயே பெண் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைத்தல் சிறந்தது. |
|---|---|

| 18 வயது முடியாத பெண்களுக்கும் 21 வயது முடியாத ஆண்களுக்கும் திருமணம் செய்து வைப்பது சட்டப்படி குற்றமாகும். சிறு வயது திருமணத்தால் பெண் குழந்தைகள் மிகச் சிறிய வயதிலேயே தாயாகி விடுவதால் தாய்மைக்குரிய பொறுப்புகளை சரிவர நிறைவேற்ற முடிவதில்லை. இத்தகைய தவறான வழக்கத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த கிராம அளவிலான விழிப்புணர்வு மையங்களை ஏற்படுத்த வேண்டும். தேவை ஏற்படும் பட்சத்தில், இக்குற்றத்தைத் தடுக்க சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | உண்மை நிலை |
|---|---|

| | |
|---|---|
| ***மாயை*** | குழந்தைகள் கடவுளின் பரிசு, கடவுளே அவர்களின் உடல்நலனைப் பார்த்துக் கொள்வார் |
| இது நம் சமுதாயத்தில் பரவிக்கிடக்கும் தவறான நம்பிக்கை. பல சமயங்களில், குழந்தையின் உடல்நலம் பாதிக்கும் போது பெற்றோர் பில்லி சூனியத்தை நாடுகிறார்கள். ஆனால் உண்மை என்னவெனில் தாயின் கருவிலிருந்து வளர்ந்து ஆளாகும் வரையில் குழந்தையின் ஆரோக்கியத்திற்கு குடும்பம் மற்றும் அரசே பொறுப்பு. அதனால்தான் கருவுற்ற தாய்க்கு தடுப்பூசி போடுதல், பாதுகாப்பான பிரசவத்தை உறுதி செய்தல், குழந்தைக்குத் தடுப்பூசி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் மூலம் முழுமையான ஊட்டச்சத்து வழங்குதல், உடல்நலம் பாதிக்கப்படும்போது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதை உறுதி செய்தல் மற்றும் முழுமையான சத்துணவை வழங்குதல் ஆகியவை அவசியமாகின்றன. இது குழந்தைகளுக்கு மறுக்கப்படக்கூடாத ஒரு உரிமையாகும். | ***உண்மை நிலை*** |

# குழந்தைப் பாதுகாப்பு – பஞ்சாயத்துத் தலைவர்களின் பங்கு

குடும்பங்கள் மற்றும் சமூகத்தினரிடையே நிலவும் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய தவறான எண்ணங்களைப் பற்றி பார்த்தோம். பல குடும்பங்கள் தங்களின் பாரம்பரிய கண்ணோட்டத்திலும் சில நேரங்களில் சொந்த சுயநல காரணங்களுக்காகவும் குழந்தைகளின் எதிர்காலத்தை பணயம் வைக்கிறார்கள். குறிப்பாக கிராமப்புற இந்தியாவின் உண்மை நிலை இதுதான் என்பதை எந்தவொரு பொறுப்புள்ள பஞ்சாயத்து உறுப்பினரும் மறுக்க முடியாது. ஒரு பஞ்சாயத்து உறுப்பினர் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக எவ்வித பங்கை அளிக்கலாம் என்பதைப் பார்க்கலாம்.

**பஞ்சாயத்து உறுப்பினர்கள் கீழ்க்காணும் குழந்தைகளைப் பாதுகாப்பதில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.**



## பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக கீழ்க்கண்டவற்றைச் செய்யலாம்.



### குழந்தைகளின் பாதுகாப்பு பற்றிய தகவல்களை மக்களிடையே பரப்புதல்

குழந்தை பாதுகாப்பு, குழந்தை தொழிலாளர், குழந்தை திருமணம் தொடர்பான சட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வு மக்களுக்கு இருந்தால், தேவைப்படும் நேரங்களில் அச்சட்டங்களை சரியாகப் பயன்படுத்த முடியும்.

### கிராம சபைகளில் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய விவாதம் நடத்துதல்

கிராமத்திலுள்ள வயது வந்தோர் (18 வயதுக்கு மேற்பட்ட) அனைவரும் கிராம சபையின் ஓர் அங்கமாகும். இச்சபைகளில் குழந்தைகளைப் பற்றியும் அவர்களின் உரிமைகளைப் பற்றியும் விவாதித்தால், அங்குள்ளவர்கள் அனைவரும் குழந்தைகளின் உரிமைகள் பற்றி தெரிந்து கொண்டு தங்கள் கிராமத்திலுள்ள குழந்தைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை எடுத்துக் கொள்வார்கள்.

### குழந்தைகள் பாதுகாப்பிற்கான கண்காணிப்பு மையங்களை நிறுவுதல்

பஞ்சாயத்துகள் குழந்தைகளின் உரிமை மீறலை தடுக்கும் நோக்கத்துடன், குழந்தைகள் பாதுகாப்பிற்கான கண்காணிப்பு மையங்களை கிராமத்தில் நிறுவலாம். இந்த மையங்கள் காணாமல் போகும் குழந்தைகள் அல்லது சமூக, பொருளாதார அல்லது உளவியல் ரீதியான ஆதரவு தேவைப்படும் குழந்தைகள் பற்றிய விவரங்களை பதிவு செய்யலாம்.

### அரசு திட்டங்களைப் பற்றிய தகவல்களை சேகரித்து அவற்றின் பயன்பாட்டை உறுதி செய்தல்

குழந்தைகள் பாதுகாப்பிற்கான அரசின் நலத் திட்டங்களைப் பற்றியும், அவற்றைப் பயன்படுத்தி குழந்தைகளை எவ்வாறு ஆதரிப்பது என்பது பற்றியும் பஞ்சாயத்து உறுப்பினர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இதைத் தவிர உதவி தேவைப்படும் குழந்தைகள் மற்றும் குடும்பங்களை பஞ்சாயத்து உறுப்பினர்கள் அடையாளம் காண வேண்டும்.

**குழந்தைகளின்மனித உரிமைகள் பற்றி புரிந்து கொள்ளுதல் மற்றும் அதைப் பற்றி குடும்பங்கள் மற்றும் சமூகத்தினரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

கிராமப்புற இந்தியாவில் இதைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாததால் இது மிகவும் அவசியம்.

**குழந்தை பாதுகாப்பிற்கான துறைகள்/அலுவலர்களிடம் முறையான தொடர்பை பேணுதல்**

உள்ளூர் காவல்துறை, கல்வியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம செவிலியர்கள், மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள், ஆஷா பணியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், சமூக மேம்பாட்டு அலுவலர்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகள் ஆகியோருடன் முறையான உறவைப் பேணிக்காத்து, குழந்தைகளின் உரிமைகள் மீறப்படும் நிகழ்வுகளைத் தடுப்பது பஞ்சாயத்து உறுப்பினர்களின் கடமையாகும். இத்தொடர்புகள் மூலம் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு, பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் பற்றிய தகவல்கள் கிடைக்கும் மற்றும் தேவைப்படும் பொழுது பாதுகாப்பிற்கான உதவியும் கிடைக்கும்.

## குழந்தைகளின் பாதுகாப்பை அச்சுறுத்தும் குழந்தைத் திருமணம்பாலின பாகுபாடு, குழந்தைத் தொழிலாளர் மற்றும் பெண் சிசுக்கொலை போன்ற சமூகக் கேடுகளுக்குஎதிரான விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொள்ளுதல்

இவ்வனைத்துச் சமூகக் கேடுகளும் குழந்தைகள் பாதுகாப்பு வரம்பை மீறுகின்றன. பஞ்சாயத்து உறுப்பினர்கள் இச்சமூகக் கேடுகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இது தொடர்பானதலைப்புளைப்பற்றி கால இடைவெளிகளில் பொது மக்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்த வேண்டும். இப்பிரச்சாரங்கள் அதிகப் பயன் உடையதாக இருக்க வேண்டுமெனில் குடும்பங்கள், சமூகத்தில் அதிக செல்வாக்கு உடையவர்கள், முதியவர்கள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோர் இதில் நேரடியாக ஈடுபடுத்தப்பட வேண்டும்.

## குழந்தைகளின் உடல் நலத்தில் தனிகவனம் செலுத்துதல்

குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமூகத்தினால் பெரும்பாலான நேரங்களில் குழந்தைகளின் உடல் நலம் புறக்கணிக்கப்படுவதால் அவர்களுக்கு சிறப்புக் கவனம் கொடுக்கப்பட வேண்டும். குழந்தைகளின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த பஞ்சாயத்து உறுப்பினர்கள், அங்கன்வாடியிலிருந்து ஆரம்ப சுகாதார மையங்கள் வரை கிராம அளவிலான மருத்துவச் சேவைகளை பலப்படுத்த வேண்டும். அங்கன்வாடி பணியாளர்கள், கிராமச் சுகாதார செவிலியர்கள் மற்றும் ஆஷா பணியாளர்களின் ஆதரவைத் திரட்டி பஞ்சாயத்து உறுப்பினர்கள் கிராமத்திலுள்ள மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தாய் சேய் உடல்நல சேவைகளை பயன்படுத்துதல், தடுப்பூசிகள் போடுதல், குழந்தைகளிடையே சத்துக் குறைபாடு, வயிற்றுப்போக்கு மற்றும் இரத்தசோகையைக் குறைப்பதன் முக்கியத்துவம் போன்றவற்றைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

# குழந்தைப் பாதுகாப்பு குழுக்கள்

ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் *(ICPS)* கீழ் கிராம/வார்டு அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்களை நிறுவ வேண்டும். அதில், பஞ்சாயத்து உறுப்பினர்கள் முக்கியமான பங்கை வகிக்க வேண்டும். இத்திட்டம் 2009-ல் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் வட்டார மற்றும் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு செயற்குழுக்களோடு, கிராமப்புறக் குழந்தைகள் பாதுகாப்பு குழுக்களும் இணைக்கப்பட்டன. குழந்தை பாதுகாப்பிற்காக இதைப் போன்ற சமுதாய அடிப்படையிலான முயற்சி முன்னெடுக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். இதில் சமூகத்தில் உள்ள வெவ்வேறு உறுப்பினர்கள், ஆபத்துக்கு உள்ளாகக்கூடிய குழந்தைகளை அடையாளங்கண்டு பாதுகாப்பற்ற குழந்தைகளுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் உதவி வழங்குகிறார்கள்.

குழந்தைகள் பாதுகாப்பு குழுக்களில், உள்ளூர் சமூக உறுப்பினர்கள், குழந்தைகள், அரசு அலுவலர்கள் மற்றும் பஞ்சாயத்து உறுப்பினர்கள் உள்ளிட்டோர் இருக்கிறார்கள். குழந்தைகளின் உரிமைகள் சுரண்டப்படுவதை தடுத்தல், சுரண்டல் நடைபெறும்போது அதிகாரிகளுக்கு தகவல் அளித்தல், இந்த நிகழ்வுகள் நடக்காதவாறு தீவிரமாக கண்காணித்தல் ஆகியவை உறுப்பினர்களின் கடமைகள் ஆகும். ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்படி இந்தியாவில் அனைத்து மாவட்டங்கள் மற்றும் கிராமங்களில் இக்குழுக்களை நிறுவ வேண்டும் என்பது கட்டாயம்.

ஒரு கிராமத்தில் இக்குழு இல்லையெனில், அதனை நிறுவி செயல்பட வைப்பது பஞ்சாயத்து உறுப்பினர்களின் முக்கிய பங்காகும். பஞ்சாயத்து உறுப்பினர்கள், குழந்தைகள், பெற்றோர் மற்றும் சமுதாய மக்கள் ஆகியோரை இக்குழுவில் பங்கேற்க ஊக்குவிக்க வேண்டும். இதே போல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு இக்குழுக்கள் செயல்திறனுடன் இயங்குவதை உறுதி செய்ய வேண்டும்.



# குழந்தை உரிமைகள் மீறல் மற்றும் பஞ்சாயத்து உறுப்பினர்களின் பங்கு

குழந்தை உரிமைகள் மீறல் என்பது நம் சமூகத்தில் பல்வேறு வடிவங்களில் நிலவுகிறது. பல சமயங்களில், குடும்பமும் சமூகமுமே இதற்குக் காரணமாக இருக்கின்றனர். மற்ற நிகழ்வுகளில், சமூக முறைகேடுகள் மற்றும் பாகுபாடான அணுகுமுறைகள் குழந்தை உரிமை மீறல்களுக்கு வழிவகுக்கின்றன. பஞ்சாயத்து உறுப்பினர்கள் குழந்தைகளின் உரிமைகள் சுரண்டப்படுவதையும் அது தொடர்பான சட்டங்கள் பற்றியும் நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் குழந்தைகள் சுரண்டப்படுவதை வெற்றிகரமாக தடுக்க முடியும்

குழந்தை உரிமைகள் சுரண்டலின் பல வடிவங்கள்



# குழந்தை தொழிலாளர்

குழந்தைகளின் குழந்தைப் பருவத்தை அபகரிக்கும், தொடர்ந்து பள்ளிக்குச் செல்வதை தடுக்கும், மனரீதியாக, உடல் ரீதியாக, சமூக ரீதியாக அல்லது ஒழுக்க ரீதியாக கேடு செய்கிற எந்த வேலையில் குழந்தைகளை பணிக்கு அமர்த்தினாலும் அவர்களை குழந்தைத் தொழிலாளர்கள் என்றே அழைக்கிறோம். கிராமங்களில், வயல்களில் வேலை செய்யும் அல்லது குடும்ப வருமானத்துக்கு பங்களிக்கும் குழந்தைகளைப் பார்ப்பது வழக்கமான ஒன்றுதான். இக்குழந்தைகளின் கல்வி வாய்ப்பு பறிக்கப்படுகிறது. மேலும், உடல்நல ஆபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புகளும் அதிகம்.

ஒரு வகையில் பார்த்தால், குழந்தைத் தொழிலாளர் பணி என்பது வெளிப்படையான சுரண்டல். ஏனெனில், அது குழந்தைகளின் கல்வி வாய்ப்பை பறித்து அவர்கள் சுரண்டப்படக்கூடிய சூழ்நிலைகளுக்குள் தள்ளி விடுகிறது.

இளவயதில் வேலைக்குப் போவதின் பக்க விளைவுகள் :- தோல் நோய்கள், நுரையீரல் நோய்கள், பார்வைத்திறன் பறிப்பு, காசநோய் போன்ற தொழில்சார்ந்த நோய்கள் பீடிக்கும் அபாயம், பணியிடத்தில் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகுதல், கல்வி வாய்ப்பு பறிபோதல் போன்றவை. இக்குழந்தைகள் வளர்ச்சி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியாதபடி வளர்ந்து தங்கள் வாழ்க்கை முழுவதும் தொழில் திறனில்லாத தொழிலாளிகளாவே இருந்து விடுகிறார்கள். குறிப்பாக, கிராமங்களில் பல்வேறு தொழில்துறைப் பிரதிநிதிகள் வேலை மற்றும் பண ஆசையைக் காட்டி 14 வயதிற்குட்பட்ட ஆண் பெண் குழந்தைகளை நகரங்களுக்கு, அழைத்துச் சென்று தொழிற்சாலைகளில் கொத்தடிமைகளாக பணியமர்த்துகிறார்கள். பல குழந்தைகள் வீட்டு வேலைக்குப் பணியமர்த்தப்பட்டு குறைவான ஊதியத்தில் அதிகமான உடல் உழைப்புக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.






## குழந்தைத் தொழிலாளர் பற்றி சட்டம் என்ன சொல்கிறது என்பதைத் தெரிந்து கொள்வோம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 23-ன்படி கட்டாயப்படுத்தப்படும் எந்தவொரு பணியும் தடை செய்யப்பட வேண்டியது. விதி 24, 14 வயதிற்கு கீழுள்ள எந்த குழந்தையும் ஆபத்தான எந்தவொரு வேலையையும் செய்வதற்குப் பணியமர்த்தப்படக்கூடாது என்று கூறுகிறது. இதைப்போலவே, “பணியாளர்களின் உடல் நலம் மற்றும் உடல் வலிமை, ஆண்கள் மற்றும் பெண்கள், குழந்தைகளின் இளவயது ஆகியன தவறாகப் பயன்படுத்தப்படக்கூடாது” என்று விதி-39 கூறுகிறது. இதே நோக்கில், குழந்தை தொழிலாளர் சட்டம் (தடை மற்றும் நெறிப்படுத்துதல்) 1986-ல், 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் ஆபத்து விளைவிக்கக் கூடிய தொழிற்சாலைகள் மற்றும் செயல்முறைகளில் வேலை செய்வதைத் தடுக்கிறது.

## பஞ்சாயத்து உறுப்பினர்களின் பங்கு

குழந்தைத் தொழிலின் தீங்குகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதற்குப் பெற்றோர்களை ஊக்குவித்தல், வேலையை விட்டுவிட்டு குழந்தைகள் பள்ளியில் சேர்வதற்கு உகந்த சூழலை ஏற்படுத்துதல், பள்ளிகளில் குழந்தைகளுக்குப் போதுமான வசதிகள் இருப்பதை உறுதி செய்தல், தொழிலதிபர்களிடம் குழந்தைத் தொழிலாளர்களைத் தடை செய்யும் சட்டங்கள் பற்றியும், மீறினால் கிடைக்கும் தண்டனைப் பற்றியும் தெரிவித்தல், கிராமங்களில் அங்கன்வாடி மையங்களை செயல்பட வைத்தல். அப்போதுதான் வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் தங்கள் சிறு குழந்தைகளை இளவயது குழந்தைகளின் பொறுப்பில் விட்டுச் செல்லாமல் இருப்பார்கள். பள்ளிகளின் சூழலை மேம்படுத்தும்படி கிராமக் கல்விக் குழுக்களை *(VEC- Village Education Committee)* ஊக்கப்படுத்த வேண்டும்.

## குழந்தைத் திருமணம்

குழந்தைத் திருமணம் என்பது நம் நாட்டில் பரவலாக காணப்படும் பழமையான ஓர் சாபக்கேடு ஆகும். இன்றும் கூட, கிராமப் பகுதிகளில் குழந்தை திருமணம் பரவலாக நடைபெறுகிறது. இதற்குப் பொதுவாக கூறப்படும் காரணம் என்னவெனில், பெண் குழந்தைகள் கணவன் வீட்டில் இருக்க வேண்டியவர்கள், அது எவ்வளவு சீக்கிரம் நடைபெறுகிறதோ, அவ்வளவு நல்லது. பெண் குழந்தைகளைப் பெற்றோர்களே



சுமையாக கருதுகின்றனர். பொருளாதார நெருக்கடியின் காரணமாக, திருமணம் என்ற பெயரில் பெண் குழந்தைகளை பெற்றோரே விற்றுவிடும் நிகழ்வுகளும் நடக்கின்றன.

**குழந்தைத் திருமணம் என்பது குழந்தை உரிமைகள் மீறல் ஆகும். இதற்கு பல காரணங்கள் உள்ளன:** குழந்தைத் திருமணத்தால் தங்களின் குழந்தைத் தன்மையை இழக்கிறார்கள். குறிப்பாக பெண் குழந்தைகள், மணமான பிறகு பள்ளிக்கு அனுப்பப்படுவதில்லை. மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள். உடல் தகுதி முழுமை பெறாத இளவயதிலேயே தாயாகி விடுகிறார்கள். இதனால் உடல்நல ஆபத்துகளுக்கு ஆளாகிறார்கள். திருமணம் ஆண் குழந்தைகளுக்கு இளவயது திருமணம் செய்து வைத்தாலும் உரிமை மீறல் தான். ஏனெனில், அவர்களுடைய கல்வியும் பாதிக்கப்பட்டு உரிய காலத்திற்கு முன்னரே குடும்பப் பொறுப்புகளைச் சுமக்க வேண்டியவர்கள் ஆகிறார்கள்.




## குழந்தைத் திருமணம் பற்றி சட்டம் என்ன சொல்கிறது என்பதைப் பார்ப்போம்

குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் 1929-ன்படி, 21 வயதுக்கு கீழுள்ள ஆணும், 18 வயதுக்கு கீழுள்ள பெண்ணும் குழந்தைகள் ஆவர். இச்சட்டத்தின்படி, ஒரு குழந்தையை மணம் செய்து கொடுப்பதோ அல்லது அத்திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்வதோ தண்டனைக்குரிய குற்றமாகும். 18 வயதுக்கு மேலுள்ள மற்றும் 21 வயதுக்குட்பட்ட நபருக்கு 15 நாட்கள் கடுங்காவல் தண்டனையும் ஆயிரம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும். 21 வயதுக்கு மேற்பட்ட நபருக்கு 3 மாதம் கடுங்காவல் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

## பஞ்சாயத்து உறுப்பினர்களின் பங்கு

கிராமத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் என்ற முறையில், குழந்தைத் திருமணத்தடுப்பில் பஞ்சாயத்து உறுப்பினர்களால் முக்கிய பங்காற்ற முடியும். எங்கேனும் குழந்தைத் திருமணம் நடைபெறுவதாகத் தகவல் தெரிந்தால், காவல் துறைக்கு தெரிவிக்க வேண்டும். அவர்கள் விசாரணைக்குப்பின் திருமணத்தை தடுத்து நிறுத்தலாம். பஞ்சாயத்து உறுப்பினர்கள் இச்சட்டத்தைப் பற்றி கிராமத்தினரிடம் எடுத்துரைத்து குழந்தைத் திருமணம், எவ்வாறு குழந்தை உரிமைகள் மீறல் என்பதைப் பற்றியும் அதனால் ஏற்படும் உடல்நல பாதிப்புகள் பற்றியும் விழிப்புணர்வினை ஏற்படுத்தலாம்.

சரியான வயதில் தங்களின் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைக்க சமூகத்தை ஊக்குவிக்கலாம். தங்களால் திருமணத்தைத் தடுத்து நிறுத்த முடியாது என்று தோன்றினால், மணமகள் மற்றும் மணமகனின் பெற்றோரிடம் பேசிப் பார்க்கலாம். குழந்தைகள் சட்டப்பூர்வமான வயதை அடையும் வரை திருமணத்தைத் தள்ளிப்போட்டு அதுவரை அவர்களை பள்ளிக்கு அனுப்பும்படி பஞ்சாயத்து உறுப்பினர்கள் பெற்றோர்களிடம் விளக்கலாம்.

# குழந்தையை பாலியல் ரீதியாக மோசமாக நடத்துதல்

நாம் குழந்தைகள் பாலியல் பலாத்காரம் மற்றும் பாலியல் சுரண்டல் பற்றி தினம் பாத்திரிகைகளில் படிக்கிறோம். குழந்தைப் சுரண்டல் நிகழ்வுகளில், அதிகபட்சமான எண்ணிக்கையுடன் இந்தியாவே முதலிடத்தில் உள்ளது. ஒவ்வொரு 155 நிமிடங்களுக்கும், 16 வயதுக்கு கீழுள்ள ஒரு குழந்தை பலாத்காரப்படுத்தப்படுவதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. சமூகத்தில் வரக்கூடிய அவமானம் கருதி பாலியல் ரீதியாக மோசமாக நடத்தப்பட்டகு குழந்தைகளின் பெற்றோர் யாரிடமும் எதுவும் கூறுவதில்லை. அறிமுகமில்லாதவர்கள் மட்டுமே இக்குற்றத்தைச் செய்வார்கள் என்பது உண்மை அல்ல. குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் மற்றும் அண்டை வீட்டார் கூட இக்குற்றத்தில் ஈடுபடலாம். ஒரு ஆய்வின்படி, குழந்தைகளைப் பாலியல் ரீதியாகச் சுரண்டுபவர்களில் 90 சதவீகிதம் பேர் குழந்தைகளுக்குத் தெரிந்தவர்கள் அல்லது குழந்தைகள் நம்பும் நபர்கள்.



உறவுமுறையில் சகோதரர்கள், மாமா அல்லது அண்டை வீட்டார், ஏன் தந்தையே கூட குழந்தைகளைப் பாலியல் ரீதியாக மோசமாக நடத்தும் பல நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. குழந்தைகளுக்கு வீட்டிலும் பாதுகாப்பு தேவை என்பதையே இது காட்டுகிறது. நடந்ததை அவர்கள் யாரிடமும் சொல்லாததன் காரணம், என்ன நடந்தது என்றே தெரியாத பயத்தினால் இருக்கக் கூடும். பாலியல் சுரண்டல் என்பது பலாத்காரம் மட்டுமே அல்ல. குழந்தைகளின் ஆபாசப் புகைப்படங்கள், குழந்தைகளை ஆபாசமான படங்களைப் பார்க்க வைத்தல், உடல் ரீதியாக அவர்களை பரிகாசம் செய்வது போன்றவை பாலியல் சுரண்டலின் பல வடிவங்கள் ஆகும்.

பாலியல் ரீதியாக சுரண்டப்பட்ட அதிர்ச்சியானது சில சமயங்களில் குழந்தைகளின் வாழ்க்கை முழுவதும் அவர்களைப் பாதிக்கிறது. குற்ற உணர்வு, பயம், தனிமை மற்றும் கவலையால் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள்.




## பாலியல் சுரண்டல்கள் குறித்து சட்டம் என்ன சொல்கிறது என்பதைப் பார்ப்போம்

இந்தியக் குற்றவியல் சட்டம், பாலியல் சுரண்டல்களை இவ்வாறு விளக்குகிறது: குழந்தைகளிடம் கட்டாயப்படுத்தப்பட்ட அல்லது தேவையற்ற பாலியல் நடத்தை, குழந்தைகளின் கௌரவத்தை சீண்டிப்பார்த்தல், பாலியல் பலாத்காரம், ஒருபாற் புணர்ச்சி கொள்ள வைத்தல் ஆகியனவும் இதில் அடங்கும்.

## பஞ்சாயத்து உறுப்பினர்களின் பங்கு

குழந்தைகள் மீதான பாலியல் சுரண்டல்களைத் தடுப்பதில் பஞ்சாயத்து உறுப்பினர்கள் முக்கிய பங்காற்ற முடியும். ஆண் மற்றும் பெண் குழந்தைகள் இருவருமே பாலியல் சுரண்டல்களுக்கு ஆளாகும் வாய்ப்பு உள்ளது என்பதையும் இக்குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களை ஆதரிப்பது முக்கியம் என்பதையும் சமூக உறுப்பினர்கள் மற்றும் கிராம அளவிலான மக்களுக்கு புரிய வைக்க வேண்டும். உள்ளூர் கல்வியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் கிராமச் சுகாதார செவிலியரின் உதவியுடன் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்ட குழந்தைகள் தங்களின் பிரச்சினைகளை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ளும்படி ஊக்குவிக்கலாம். அவ்வாறு பகிர்ந்துக்கொள்ளப்படும் இரகசியத்தை இறுதிவரை காப்பதை உறுதி செய்ய வேண்டும். கிராமத்திலுள்ள எந்தவொரு குழந்தையும் பாலியல் சுரண்டல்களால் பாதிக்கப்பட்டால், பஞ்சாயத்து உறுப்பினர்கள் அருகேயுள்ள காவல் நிலையத்தை அணுகி முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்து சட்ட உதவியைக் கோர வேண்டும்.

## குழந்தைக் கடத்தல்

பதினெட்டு வயதிற்கு கீழுள்ள எந்த நபரும் சட்டத்துக்குப் புறம்பாக பணியமர்த்தப்படுதல், இடம் மாற்றப்படுதல், வேறிடத்திற்கு அழைத்துச் செல்லப்படுதல், மறைத்து வைக்கப்படுதல் அல்லது அச்சுறுத்தப்படுதல், வலிமையை செலுத்துதல் மற்றும் கட்டாயப்படுத்தப்படுதல் அல்லது தவறாக நடத்தும் நோக்கில் பயமுறுத்தப்படுதல், ஆகியவை நாட்டிற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ நடைபெறுவதைக் குழந்தைக் கடத்தல் என்கிறோம். இந்தியாவில் குழந்தைக் கடத்தல் என்பது பொதுவாக நடைபெறும் மோசமான வழக்கமாகும். குழந்தையை மோசமாக பயன்படுத்துவது பல காரணங்களுக்காக நடைபெறுகிறது. அதற்கான சில முதன்மைக் காரணங்கள் பின்வருமாறு :-

### பாலியல் ரீதியாக மோசமாகப் பயன்படுத்துதல் :

குழந்தைகள், குறிப்பாக பெண் குழந்தைகளை ஆசை வார்த்தைக் காட்டி வேறொரு நகரத்துக்கு இடம் மாறச் சொல்லி அவர்களை விபச்சாரம், பாலியலுக்கான சுற்றுலா மற்றும் ஆபாச படமெடுப்பதில் பயன்படுத்துகிறார்கள்.

### சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகள் :

கடத்தப்படும் குழந்தைகள் பிச்சையெடுக்கும்படி வற்புறுத்தப்படுகிறார்கள். சில சமயங்களில் சிறுநீரகம் போன்ற அவர்களுடைய உடல் உறுப்புகள் விற்கப்படுகின்றன. அக்குழந்தைகள் பல நேரங்களில் போதை மருந்து கடத்தலுக்காகவும் பயன்படுத்தப்படுகிறார்கள்.

### வேலை :

குழந்தைகள் நகரத்துக்குள் அழைத்து வரப்பட்டு தொழிலதிபர்களுக்கு கொத்தடிமைகளாக விற்கப்படுகிறார்கள். பெரும்பாலும் இவர்கள் கம்பளம் பின்னுதல், வைரம் பட்டை தீட்டுதல் போன்ற தொழிற்சாலைகளில் பணியமர்த்தப்படுகிறார்கள்.

இளவயதுப் பெண்கள் வயதான ஆண்களுக்கு விற்கப்படுகிறார்கள். அவர்கள் அக்குழந்தைகளைத் திருமணம் செய்து கொள்கிறார்கள் அல்லது வேறு ஆண்களுக்கு விற்றுவிடுகிறார்கள்.






## குழந்தைகள் கடத்தலைப் பற்றி சட்டம் என்ன சொல்கிறது என்பதைப் பார்ப்போம்

இந்திய சட்டத்தில் குழந்தை கடத்தலுக்குச் சட்ட ரீதியான பொருள் விளக்கம் இல்லை. பாலியல் தொழில் தடுப்பு சட்டம் ***(Immoral trafficking Act)*** என்பது சட்டப்படி சிறியவர்களை(மைனர்) விபச்சாரத்துக்காக கடத்துதல் குறித்து மட்டுமே கூறுகிறது. எனினும், குழந்தை கடத்தலில் *(child trafficking)* உதவக்கூடிய வேறு சட்டங்கள் உள்ளன. இந்திய தண்டனைச் சட்டம் *(Indian Penal Code)*, சிறார் நீதிச்சட்டம் *2000 (Juvenile Justice Act)*, ஆந்திரப்பிரதேச தேவதாசி ( கோயிலுக்கு அர்ப்பணிப்பதற்குத் தடை) சட்டம் *1988*, பம்பாய் பிச்சையெடுத்தல் தடை சட்டம் போன்றவை.

## பஞ்சாயத்து உறுப்பினர்களின் பங்கு

பஞ்சாயத்து உறுப்பினர்கள், கடத்தலைத் தடுப்பதற்கு பல வழிகளில் உதவி செய்யலாம். பெற்றோரிடையே குழந்தை கடத்தலைப் பற்றியும் அதிலுள்ள ஆபத்துகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தலாம். நகரங்களுக்கு இடம் பெயர்ந்து செல்லும் கிராமத்துக் குடும்பங்களைப் பற்றிய தகவலைப் பதிவு செய்து வைத்திருக்க வேண்டும். ஒரு குழந்தை காணாமல் போனால் அருகாமையிலுள்ள காவல் நிலையத்திற்கு உடனடியாக தகவலளித்து சட்ட உதவியைக் கோர வேண்டும்.

## எச்.ஐ.வி./எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பாகுபடுத்துதல்

எச்.ஐ.வி/எய்ட்சுடன் வாழும் மக்கள் பாகுபாட்டை எதிர்கொள்கிறார்கள். குறிப்பாக கிராமங்களில் அவர்கள் தீண்டத்தகாதவர்களாக நடத்தப்படுகிறார்கள். எச்.ஐ.வி./எய்ட்ஸ் இருந்தாலும் இல்லையென்றாலும் அவர்களுடைய குழந்தைகளும் பாதிக்கப்படுகிறார்கள். பள்ளியும் சமூகமும், அவர்களை வெறுப்புடன் நடத்துகின்றன. இக்குழந்தைகளின் பெற்றோர் இறந்துவிட்டால், அவர்களுடைய உறவினர்கள் கூட குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்பதில்லை.



எச்.ஐ.வி./எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் உரிமைகள் பல வழிகளில் மீறப்படுகின்றன. சமூகத்தால் பாகுபடுத்தப்படுகிறார்கள்; கல்வி மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன; சரியான சேவைகள், தீர்வுகள் மற்றும் உதவிகளைப் பெற முடிவதில்லை; பள்ளிகளில் தனியாக உட்காரவைக்கப்படுகிறார்கள் மற்றும் சில சமயங்களில் பள்ளிச் சேர்க்கை கூட மறுக்கப்படுகிறது. அவர்களே தங்களைப் பார்த்துக் கொள்ளும்படி விடப்படுகிறார்கள்.




## எச்.ஐ.வி./எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பற்றி சட்டம் என்ன சொல்கிறது என்பதைப் பார்ப்போம்.

எச்.ஐ.வி./எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தீர்வாகச் செயல்படும் வகையில்இந்தியஅரசுகொள்கைகளைவகுத்துள்ளது. தேசியஎய்ட்ஸ்கட்டுப்பாட்டு நிறுவனமானது (*NACO*) எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்பு மற்றும் நிவாரணத்துக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. எச்.ஐ.வி. தொற்றுள்ளவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க தனிச்சட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்றாலும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் அனைத்துக் குடிமக்களுக்கும் உறுதியளித்துள்ள சில அடிப்படை உரிமைகள் எச்.ஐ.வி. தொற்றுள்ளவர்களுக்கும் பொருந்தும். அதாவது தகவலைக் கூறி சம்மதம் பெறுவதற்கான உரிமை, இரகசியம் காக்கப்படுவதற்கான உரிமை, பாரபட்சத்திற்கு எதிரான உரிமை போன்றவை.

## பஞ்சாயத்து உறுப்பினர்களின் பங்கு

பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கே கூட எச்.ஐ.வி./எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு தேவை. இத்தகவல்கள் கிராம சபைகள் மூலம் கிராமத்தில் வசிக்கும் மற்றவர்களிடமும் பகிரப்பட வேண்டும். கிராமத்தில் யாருக்கேனும் இப்பாதிப்பு ஏற்பட்டால் பஞ்சாயத்து உறுப்பினர்கள், பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பாதுகாக்க அரசிடம் உதவி கோர வேண்டும்.

## உடலைப் பாதிக்கும் தண்டனை




கிராமத்தினர் பலரும், “அடி உதவுகிற மாதிரி அண்ணன் தம்பி கூட உதவ மாட்டான்,” என்ற பழமொழியை ஏற்றுக் கொண்டவர்கள். ஒரு குழந்தையை நெறிப்படுத்துவதற்கு உடல் ரீதியான தண்டனை தேவை என அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. குழந்தைகளை நல்வழிப்படுத்துவதற்காக கொடுக்கப்படும் உடல்ரீதியான தண்டனைகள் மிகவும் மோசமானவை. அது குழந்தைகளை நல்வழிப்படுத்துவதற்கு மாறாக, குழந்தைகள் உணர்வு ரீதியாக பாதிக்கப்பட்டு தங்களைத் தண்டிப்பவர் மீது வெறுப்புணர்வை ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.




## குழந்தைகளுக்கு உடல் ரீதியான தண்டனை கொடுப்பது பற்றி சட்டம் சொல்வது என்ன?

பெற்றோர் குழந்தைகளுக்கு உடல் ரீதியாக தண்டனை கொடுப்பதைத் தடுப்பதற்கான சட்டங்கள் இந்தியாவில் போதுமானதாக இல்லை. ஆனால் கோவா, தமிழ்நாடு, மேற்கு வங்கம், ஆந்திரா போன்ற மாநிலங்கள் பள்ளிகளில் உடல் ரீதியான தண்டனைகள் கொடுப்பதைத் தடை செய்துள்ளன. இப்பிரச்சினை குறித்து சட்டம் இயற்றுவதைப் பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

.

## பஞ்சாயத்து உறுப்பினர்களின் பங்கு

பஞ்சாயத்து உறுப்பினர்கள் தங்கள் வீடுகளில், குழந்தைகளுக்கு உடல் ரீதியான தண்டனை அளிப்பதை நிறுத்தி மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து அவர்களும் அவ்வாறே செய்ய ஊக்குவிக்க வேண்டும். கிராமப் பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கு கொடுக்கப்படும் உடல் ரீதியான தண்டனையை எதிர்க்க வேண்டும். இத்தகு பிரச்னைகள் பொது வெளிக்கு வந்தால் பஞ்சாயத்து உறுப்பினர்கள் இதைப் பற்றிய விவாதத்தை கிராம சபையில் எழுப்ப வேண்டும். பள்ளிகளில் உடல் ரீதியான தண்டனையைத் தடை செய்யும்படி கிராமக் கல்விக் குழுக்களை *(VILLAGE EDUCATION COMMITTEES)* ஊக்குவிக்க வேண்டும்.

## சாதிப் பாகுபாடு

தீண்டாமை மற்றும் சாதிப் பிரச்சினை போன்றவை இன்றும் கிராமப் புறங்களில் சாதாரணமாக நடக்கின்றன. சாதியத்தில் வேரூன்றிய கலாச்சாரமே இதற்கு காரணம். பெரியவர்கள் மட்டுமல்ல, குழந்தைகளும் இதைப் போன்ற பாரபட்சத்திற்கு ஆளாகிறார்கள். சமூகம், பள்ளிகள் அல்லது விளையாட்டு மைதானம் என்று எதுவாக இருந்தாலும், சாதி பாகுபாட்டால் பல குழந்தைகள் அவமானப்படுத்தப்படுகிறார்கள். பள்ளியில் மதிய உணவு வழங்கும் போது, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளை தனியே உட்கார வைத்து உணவருந்த வைத்தல், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண் குழந்தைகளை கழிவறைகளை சுத்தம் செய்யப் பணித்தல், சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகளை ஆசிரியர்கள் வகுப்பில் கடைசி வரிசையில் அமரச் சொல்லுதல் போன்ற நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன.






## சாதி பாகுபாடு பற்றி சட்டம் என்ன கூறுகிறது என்று பார்ப்போம்

இந்திய அரசியலமைப்பு சட்டம் விதி-14-ன்படி இந்திய எல்லைக்குள் எந்தவொரு நபருக்கும் சட்டத்திற்குமுன் சமஉரிமை மறுக்கப்படக் கூடாது அல்லது சமமான சட்ட பாதுகாப்பு மறுக்கப்படக் கூடாது. விதி-15, அரசானது குடிமக்களை மதம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் அல்லது வேறு எதன் அடிப்படையிலும் பாகுபடுத்துவதைத் தடை செய்கிறது.

விதி-17-ன்படி, தீண்டாமை ஒழிந்துவிட்டது எனவும், அதை எவ்வடிவில் கடைப்பிடித்தாலும். குற்றமே எனப் பிரகடனம் செய்கிறது. 'தீண்டாமை' பற்றிய பிரச்சாரம், அதைக் கடைப்பிடித்தல் மற்றும் அது தொடர்பான எந்த செயலுக்கும் தண்டனை வழங்கிய முதல் இந்தியச் சட்டம் 'சமூக உரிமை பாதுகாப்புச் சட்டம், 1955' ஆகும் (The Protection of Civil Rights Act-1955).

1989-ம் ஆண்டில் இந்திய அரசானது பட்டியலின சாதியினர் மற்றும் பழங்குடியின மக்கள் (கொடுமை தடுப்பு) சட்டம் இயற்றியது. இச்சட்டம் பட்டியலின மற்றும் பழங்குடி மக்கள் மீது பட்டியலினத்தைச் சாராதவர்கள் நிகழ்த்தும் பல்வேறு வன்முறை மற்றும் பாரபட்ச நடத்தைகளை தண்டனைக்குரிய குற்றங்களாக அறிவித்தது. இவற்றை விசாரிக்க மாவட்ட அளவிலான சிறப்பு நீதிமன்றங்கள் அமைவதற்கும் வழிவகை செய்துள்ளது.

## பஞ்சாயத்து உறுப்பினர்களின் பங்கு

பஞ்சாயத்து உறுப்பினர்கள் இப்பிரச்சினைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கிராமத்திலுள்ள பெரியவர்கள் அல்லது குழந்தைகள் மீது சாதி பாகுபாடு காட்டும் நிகழ்வு ஏதேனும் நடந்தால், பஞ்சாயத்து உறுப்பினர்கள் இப்பிரச்சினையை கிராம சபையில் எழுப்ப வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவருக்கு உரிய தண்டனையை வழங்க வேண்டும். பஞ்சாயத்து உறுப்பினர்கள் சாதி அடிப்படையிலான பாகுபாட்டை தங்கள் கிராமத்தில் இருந்து ஒழிப்பதோடு மட்டுமல்லாமல் சிறுபான்மை குழுக்களின் பிரதிநிதிகளுக்கு தங்கள் பிரச்சினைகளைப் பற்றி பஞ்சாயத்தில் குரலெழுப்ப சமவாய்ப்பு வழங்க வேண்டும்.

# பெண் கருக்கொலை மற்றும் பெண் சிசுக்கொலை

பெண் கருக்கொலை என்பது கருவில் வளர்வது ஆணா, பெண்ணா என்று பரிசோதித்துப் பெண்ணாக இருந்தால் கருச்சிதைவு செய்தல் ஆகும். இது சட்டப்படி குற்றம் என்றாலும், பலபேர் தொடர்ந்து இதைச் செய்கின்றனர். இதைத் தவிர சில சமூகங்கள் பெண் சிசுக்கொலையிலும் ஈடுபடுகின்றன. பிறந்த பெண் குழந்தைகளைக் கொல்லும் நடைமுறை: 2001 கணக்கெடுப்பின்படி, நம் நாட்டில் ஒவ்வொரு 1000 ஆண்களுக்கும் 933 பெண்களே உள்ளனர். இதைத் தவிர, 1991-ல் 1000 சிறுவர்களுக்கு 945 சிறுமிகளாக இருந்த குழந்தை பாலின விகிதம், 2001-ல் 927 பெண் குழந்தைகளாக குறைந்துள்ளது. பெண் குழந்தைகளுக்கு மனித உரிமைகளை மட்டுமல்ல, உயிர் வாழ்வதற்கான உரிமைகளையும் மறுக்கிறோம் என்பதையே இது காட்டுகிறது.

இப்பழக்கம் நிறுத்தப்பட வேண்டும். ஏனெனில், பெண் மற்றும் ஆண் குழந்தைகள் இருவருக்குமே உயிர் வாழ்வதற்கான சம உரிமை உண்டு. வரதட்சணை, குழந்தைத் திருமணம் மற்றும் சாதி பாகுபாடு போன்ற பழக்கங்களை தடை செய்வதன் மூலம் அவர்களுடைய உரிமைகளை பாதுகாப்பது அவசியம்.




## பெண் கருக்கொலை மற்றும் பெண் சிசுக்கொலை பற்றி சட்டம் என்ன சொல்கிறது

இந்திய தண்டனை சட்டத்தின் (Indian Penal Code) சில பிரிவுகளின்படி கட்டாயக் கருச்சிதைவு, பிறக்காத குழந்தையைக் கொல்வது அல்லது ஒரு குழந்தை உயிருடன் பிறப்பதை தடுப்பது போன்றவை தண்டனைக்குரிய குற்றங்கள் ஆகும். இதைத் தவிர, பிறப்புக்கு முந்தைய நோய் கண்டறியக்கூடிய தொழில் நுட்பமுறைகள் (வரைமுறைப் படுத்துதல் மற்றும் துஷ்பிரயோகத்தை தடுத்தல்) சட்டம் என்பது, கரு பரிசோதனை முறைகளைப் பயன்படுத்தி பெண் கருக்கலைப்பில் ஈடுபடுதலைத் தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கின்றது.



## பஞ்சாயத்து உறுப்பினர்களின் பங்கு

பஞ்சாயத்து உறுப்பினர்கள் இப்பிரச்சினைத் தொடர்பான சட்டங்களைப் பற்றிய சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பழக்கத்தை கிராமத்திலுள்ள எப்பகுதியில் கடைபிடிக்கிறார்கள் என கண்டுபிடித்து உடனே விசாரணை மேற்கொள்ள வேண்டும். பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்ட அனைத்து பிறப்பு மற்றும் இறப்புகளை பதிவு செய்ய வேண்டும். பொதுமக்களுக்கான கல்வி நிகழ்ச்சிகள் மூலம் பாலின சமத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கிராமச் சுகாதார செவிலியர் மற்றும் உள்ளூர் தாதிகளின் உதவியுடன் பெண் கருக்கொலையைத் தடுக்க வேண்டும்.

## தெருவோர மற்றும் ஓடிப்போன குழந்தைகள்

நகரங்களில் அடிக்கடி இரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், நடைபாதைகள் மற்றும் பொது இடங்களில் எவ்வித நோக்கமும் இன்றி திரியும், பிச்சையெடுக்கும் அல்லது குப்பை பொறுக்கும் குழந்தைகளை நாம் பார்க்கலாம். இவர்களில் பலருக்கு வீடில்லை அல்லது தனியாகவே தங்குகிறார்கள். இவர்களில் சிலர் வீட்டிலிருந்து ஓடி வந்தவர்களாக இருக்கக் கூடும். நகரங்களின் கவர்ச்சி, ஒத்த வயதினரின் அழுத்தம், வீட்டில் அச்சுறுத்தல், உடல் ரீதியான கொடுமை அல்லது பெற்றோரால் கைவிடப்படுதல் போன்றவை இதற்கு காரணங்களாக இருக்கக் கூடும்.



இக்குழந்தைகளில் பலர் சரியான உணவு இன்றி தவிக்கிறார்கள். சிலர் சிறு குற்றவாளிகள் அல்லது ஆண் கடத்தல்காரர்களின் பிடியில் சிக்கிக் கொள்ளும் நிகழ்வுகளும் நடந்தேறுகின்றன. இக்குழந்தைகள் மோசமான சகவாசம் மற்றும் போதைப் பழக்கத்திற்கு எளிதில் வயப்படுகிறார்கள். சிறு குற்றங்கள், பிச்சையெடுத்தல் மற்றும் போதை மருந்து கடத்தலில் ஈடுபடுகிறார்கள்.




## தெருவோர மற்றும் ஓடிப்போகும் குழந்தைகள் பற்றி சட்டம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

*சிறார் நீதி (கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்-2000, கவனிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்துக்கு புறம்பான நடவடிக்கைகளில் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்படும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு வழங்குகிறது. வீடற்ற, வாழ்வாதார வாய்ப்புகள் பறிக்கப்பட்ட, பெற்றோர் அல்லது காப்பாளர் யாருமற்ற, அநாதைகள் அல்லது பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகள் இந்த சட்டப்பிரிவின் கீழ் வருகிறார்கள்.*

*இச்சட்டத்தின்படி, ஒவ்வொரு மாநில அரசும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தை நலக்குழுக்களை மாவட்ட வாரியாக அல்லது சில மாவட்டங்களுக்குச் சேர்த்து ஒன்று என்ற ரீதியில் அமைக்க வேண்டும். இக்குழுக்கள் கவனிப்பு, பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கான மறுவாழ்வு குறித்த நிகழ்வுகளைக் கையாள வேண்டும்.*

## பஞ்சாயத்து உறுப்பினர்களின் பங்கு

*கிராமத்திலுள்ள ஒரு குழந்தை வீட்டைவிட்டு ஓடிப்போனால், பஞ்சாயத்து உறுப்பினர்கள், உடனே காவல் துறைக்குத் தகவல் தெரிவித்துவிட்டு,1098 - சைல்ட் லைன் என்ற இலவச தொலைபேசியைத் தொடர்புக் கொண்டு, குழந்தையைக் கண்டுபிடிப்பதற்கும், குழந்தைக்கு தேவையான ஆதரவையும் வழங்க உதவிக் கோர வேண்டும். காவல் துறையோ அல்லது அரசுசாரா நிறுவனமோ ஓடிப்போன குழந்தையைக் கண்டுபிடித்து பெற்றோரிடம் ஒப்படைத்தால், பஞ்சாயத்து உறுப்பினர் குழந்தை மற்றும் பெற்றோரிடம் பேசி ஏன் அவன்/அவள் ஓடிப்போனார்கள் என்ற காரணத்தை அறிந்து கொள்ள வேண்டும். அவர்கள், குழந்தைகளுக்கு ஏதுவான சூழ்நிலையை குடும்பத்தில் உருவாக்க வேண்டும்.*

*பஞ்சாயத்து உறுப்பினர்கள் மாவட்டங்களில் உள்ள மற்ற பஞ்சாயத்துக்களுடன் சேர்ந்து, ஒரு குழந்தை நலக்குழு மற்றும் சிறார் நீதி வாரியம் அமைக்க வேண்டும். குழந்தைகளை ஆதரிக்க நிறுவப்பட்ட இலவச சைல்ட் 1098எண்ணை பிரபலப்படுத்த வேண்டும்.*

## மாற்றுத் திறனுள்ள குழந்தைகள்

உடல் ரீதியான மற்றும் மனரீதியான மாற்றுத் திறனுள்ள குழந்தைகள் பெரும்பாலும் பரிதாபத்துக்கு உரியவர்களாகப் பார்க்கப்படுகிறார்கள். உடல் ரீதியான அல்லது மனரீதியான மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்கும் உரிமைகள் உண்டு என்பதையும், பரிதாபத்தைவிட நம்முடைய அன்பான புரிதலே அவர்களுக்குத் தேவை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.



பல சமயங்களில், உடல் மற்றும் மனரீதியான திறன் குறைபாடு என்பது சமூகத்தில் ஒரு சாபமாகக் கருதப்படுகிறது. இக்குழந்தைகளின் குடும்பங்கள் அவர்களை ஒரு பாரமாக கருதுகின்றன. ஆனால் இக்குழந்தைகளுக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய சிறப்பு தேவைகள் உள்ளன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.




### மாற்றுத் திறனுள்ள குழந்தைகளைப் பாகுபடுத்துவது பற்றி சட்டம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

குறைபாடுகள் உடைய நபர்கள் சட்டம்-1995-ன்படி, குறைபாடுகள் உடையவர்க்கு சம வாய்ப்புகளை உறுதி செய்து கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சி வழங்குவதை உறுதி செய்கிறது.

## பஞ்சாயத்து உறுப்பினர்களின் பங்கு

பஞ்சாயத்து உறுப்பினர்கள், உடல் மற்றும் மனரீதியான குறைபாடுகள் பற்றி நிறையக் கற்றறிய வேண்டும். மாற்றுத் திறனுடையோர்க்கு உதவும் அமைப்புகளைத் தொடர்பு கொண்டு அவ்வமைப்புகளை பெற்றோருக்கு அறிமுகம் செய்து சேவைகளைப் பயன்படுத்த துணை புரிய வேண்டும். அங்கன்வாடி பணியாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் சமூகத்தினரிடையே மாற்றுத் திறனுள்ள குழந்தைகளின் சிறப்பு தேவைகளைப் பற்றி எடுத்துக் கூற வேண்டும்.

பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு குழந்தை பாதுகாப்பு சட்டங்களைப் பற்றிய முழுமையான தகவல் மற்றும் விழிப்புணர்வு உள்ளது.

இச்சட்டங்களை மீறுபவர் மீது பஞ்சாயத்து கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்.

குழந்தைகள், இளவயதினர் மற்றும் சமூகத்தினர் குழந்தை பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உற்சாகத்துடன் பங்கேற்பார்கள்.

குழந்தைகள் அனைத்து உடல் நல சேவைகளையும் பயன்படுத்துகிறார்கள்.

அனைத்து பள்ளிகளிலும் குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் உள்ளன.

அனைத்து பிறப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 100 சதவிகிதம் உள்ளது.

நம் குழந்தைகள் அனைவரும்
பாதுகாப்பாகவும்,
பத்திரமாகவும் உள்ளார்கள்









